

திருவாசகம் - 30
திருக்கழுக்குன்றப் பதிகம் கதைவழியில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# திருக்கழுக்குன்றப்பதிகம்
# சற்குரு தரிசனம்
# திருக்கழுக்குன்றத்தில் அருளியது

**பிணக்கிலாத பெருந்துறைப்பெரு மான் உன்நாமங்கள்**
**பேசுவார்க் கிணக்கிலாததோர் இன்ப மேவுருந் துன்ப**
**மேதுடைத் தெம்பிரான் உணக்கிலாததோர் வித்துமேல்யிளை**
**யாமல் என்வினை ஒத்தபின் கணக்கி லாத்திருக்கோலம்**
**நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே. 01**

நவராசாவிடம் அடிவாங்கிய ரவிச்சந்திரன், நவராசாவை எந்த வழியிலாவது பழிவாங்கவேண்டும் என்று துடித்தான். அவனது நண்பனான கயமுகனின் தந்தை கார்த்திகேசுதான் அந்த ஊர் காவல் துறை அதிகாரி. அவர் இலஞ்சம் பெற்றுக் கொண்டு நீதிக்கு மாறாக நடப்பவர். சில நாட்களுக்கு முன்பு கதிரேசனின் உறவினன் ஒருவனை இன்னொருவரிடம் பெற்ற காசுக்காகக் கைது செய்து காவலில் வைத்தபோது கதிரேசன் அதை மாவட்ட காவல்துறை அதிகாரிக்கு அறிவிக்க அதனால் பெருந்துயரப்பட்டவர் கார்த்திகேசு. இதை அறியாத ரவிச்சந்திரன் கார்த்திகேசுவோடு கதைத்தான்: “ஐயா, நவராசா என்ற ஒருவன் காரணமில்லாது என்னைத் தாக்கிவிட்டான். அது எனக்குப் பெரும் மனவருத்தமாகவும் அவமானமாகவும் இருக்கிறது. அவனைக் கைது செய்து எனக்கு முன்னால் ஓர் அடி அவனுக்கு அடித்தால் போதும்” என்றான்.

“நவராசாவை எனக்குத் தெரியும். அவன் சண்டைக்குச் செல்பவன் அல்ல. நீ ஏதாவது முரட்டுத்தனமாக நடந்திருப்பாய் அத்துடன் அவன் கதிரேசன் என்பவரின் மாணாக்கன். ஏதாவது பிரச்சினையென்றால் அவர் வந்துவிடுவார். கதிரேசன் பெரும் சிவபக்தர். சிவனோடு கதைப்பவர் என்று ஊரவர்கள் சொல்வார்கள். அது உண்மையென்று பலமுறை நான் உணர்ந்துள்ளேன். அவர் எவ்வேளையிலும் வித்தில்லாமல் முளைத்துப் பெருவிருட்சமாகத் தோன்றிய பெருமரம் என்று சொல்லிச் சிவனை வணங்குபவர். தொடர்ந்து பிறவியை உண்டு பண்ணுவது பற்று என்று உணர்ந்து பற்றுக்களை அறுத்தவர். அத்துடன் ஊரில் உள்ள பெரியவர்கள் எல்லோரும்

அவரைச் சிவனின் உரு என்று நினைக்கின்றனர். நடுநிலையான சேவையாளன். அதனால் அவரை எல்லோரும் நம்புவர். நீ முரட்டுத்தனமாக நடந்திருப்பாய். உனது நண்பன் சுந்தரேசனின் பெயரைக் கேட்டாலே ஊரார் அடிக்க வருவர். அவனுடன் சென்றா அடி வாங்கினாய்" என்று கேட்டார். இரவிச்சந்திரன் நடந்ததைச் சொன்ன பின் கார்த்திகேசு சொன்னார்; "மலையோடு மோதுவது போன்றது அவர்களோடு பிரச்சினைப்படுவது. ஆகையால் அச் சம்பவத்தை மறந்துவிடு " என்றார்.

இரவிச்சந்திரனுக்கு அவரின் பேச்சுப் பிடிக்கவில்லை இருப்பினும் எதுவும் பேசாது சென்றான்.

**பிட்டுநேர்பட மண்சுமந்த பெருந் துறைப்பெரும் பித்தனே**

**சட்டநேர்பட வந்திலா சழக்கனே் உனைச் சார்ந்திலேன்**

**சிட்டனே சிவலோகனேநசிறு நாயினுங்கடையாய வெங்**

**கட்டனேனையும் ஆட்கொள்வான்வந்து காட்டினாய்**

**கழுக்குன்றிலே. 02**

இரவிச்சந்திரன் வேதனையுடன் இருப்பதை உணர்ந்த கயமுகன் சொன்னான்; "ரவி அப்பா கதிரேசனுக்குப் பயந்தவர். சமீபத்தில் கதிரேசனது உறவினர் ஒருவரைக் கைது செய்தமையால் மேலிடத்தால் எச்சரிக்கப்பட்டவர். அவர் இதில் ஈடுபடமாட்டார். எனக்குத் தெரிந்த அடியாட்கள் சிலர் இருக்கிறார்கள் பணம் கொடுத்தால் எதையும் செய்வார்கள். அப்பா மூலம் அவர்களுக்கு நான் சில உதவிகள் செய்திருக்கிறேன். வா போய்க் கதைப்பம்" என்று அழைத்துச் சென்றான். அவர்கள் தேடி வந்த மூவரும் சாராயம் விற்கும் இடத்தில் குடித்துக் பெகாண்டு நின்றனர்.

கயமுகனைக் கண்ட மூவரும் வெளியே வந்தனர். கயமுகன் சொன்னான்; "இவர் எனது நண்பர். நவராசா என்றொருவன் இவரைக் காரணமின்றி அடித்துவிட்டான். அவனுக்கு அடிக்க வேண்டும். உங்களுக்கு எவ்வளவு பணம் தேவை"

"ஐயையோ, நவராசாவோ எங்களால் முடியாது. நவராசா முன்கோபக்காரன் என்றாலும் நல்லவன். காரணமின்றிக் கோபப்படமாட்டான். அத்துடன் ஊர்ப்பெரியவர் கதிரேசன் எப்படியும் குற்றவாளிகளைப் பிடித்து விடுவார். பெரும் சிவபக்தர் அவர். அவருக்காகச் சிவன் எதையும் செய்வான். மாணிக்கவாசகருக்காகப் புட்டுக்கு மண்

சுமந்த சிவன் அவருக்காக தானே நேரில் வந்து குற்றவாளியை பிடித்தும் கொடுப்பான். அப்படியான பக்தர் அவர். அது உமக்குத் தெரியும் தானே. உமது தந்தை பட்டபாடு தெரிந்தும் வந்துள்ளீர். எம்மால் அது முடியாது" என்றான் மூவருக்கும் தலைவனான பாலன். இவர்கள் கதைப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றவன் சொன்னான்; "நாம் தீய செயல்களில் ஈடுபடுவர்கள் தான். எனினும் ஆச்சிரமத்தில் உண்பவர்கள் கதிரேசனுக்குப் பல வழிகளிலும் கடமைப்பட்டவர்கள். அதனால் அதைச் செய்யமாட்டோம். நாம் தீயவர்களானாலும் திருவாசகத்தைச் சுவாமியார் பேசும்போது கேட்டுள்ளோம். "சிவன் பக்தர்களின் மீது பித்தும் கொண்டவன். அதனால் பக்தர்களுக்காக எதையும் செய்வான், "நான் பக்தன் இல்லை. உன்னைச் சார்ந்தவனும் அல்ல. குற்றங்கள் பலவும் செய்பவன். அதனால் பெரும் துன்பப்படுபவன். அந்தத் துன்பங்களை அன்பே உருவான நீ நீக்கி என்னை ஆட்கொள்" என்று மாணிக்கவாசகர் சொல்வதைச் சுவாமியார் சொல்லக் கேட்ட பின்பு நாம் திருந்தி வாழ நினைக்கிறோம்" என்றான். அவர்களுக்கு ஏமாற்றமாய்ப் போய்விட்டது பேசாமல் சென்றனர்.

**மலங்கினேன் கண்ணின்நீரை மாற்றி மலங்கெடுத்த**

**பெருந்துறை விலங்கினேன் வினைக்கேடனேன் இனி மேல்**

**விளைவதறிந்திலேன் இலங்குகின்றநின்சேவடிகள் இரண்டும்**

**வைப்பிடமின்றியே கலங்கினேன் கலங்காமலேவந்து**

**காட்டினாய் கழுக்குன்றிலே. 03**

கதிரேசன் பரமேஸ்வரனுக்குச் சொன்னார்; "சுந்தரேசனின் நண்பனான ரவிச்சந்திரன் நவராசாவுக்கு அடிக்க ஆள்த் தேடித் திரிவதாக பாலன் சொன்னான் காத்திகேசுவின் மகன் கயமுகன் தான் அவர்களைக் கூட்டிக் கொண்டு திரிகிறான். படித்தவர்கள் பண்புள்ளவர்களாகவும் அறிவுடையவர்களாகவும் வாழவேண்டும். இவர்கள் ஏன் இப்படி வாழ்கிறார்களோ தெரியவில்லை. கார்த்திகேசு திருநீற்றுப்பூச்சுடன் உருத்திராக்கமும் அணிந்து கொண்டு தீயசெயல்களைச் செய்கிறான். மனப்பக்குவம் இல்லாதோர் உருத்திராக்கம் அணிவது பாவம். இதைச் சுவாமியார் அடிக்கடி பிரசங்கத்தில் சொல்லியும், படித்தவர்கள் அதைப் பின்பற்றுகிறார்கள் இல்லை. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கார்த்திகேசுவும் மகனும் திருவாசக உரையைக் கேட்க வருவார்கள். பயபக்தியுடன் கேட்பார்கள். பிறகு தீயவற்றைச் செய்வார்கள். மாணிக்கவாசக சுவாமிகள், "திருப்பெருந்துறையில் எனது தீய குணங்களைக் களைந்து துயரத்தைப் போக்கினாய். அப்புனிதமான கோவிலைப் புறக்கணித்த பாவிநான். இனி

என்ன செய்ய வேண்டும் என்று எனக்கு விளங்கவில்லை. உனது திருவடிகளை எனது மனதில் நிலைநாட்டத் தகுதியில்லாதவன் நான். எனினும் எனக்கு உனது திருக்கோலத்தைக் கழுக்குன்றிலே காட்டியருளிய தயாளன்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூற அதைப் புரிந்து கொள்ள முடியாதவனான கார்த்திகேசு, "தீயவர்களுக்கும் சிவன் காட்சி கொடுப்பானா..?" என்று கேட்டவன். "கார்த்திகேசு தீயவர்கள் என்று யாரும் இல்லை. சந்தர்ப்ப சூழ்நிலைகளால் சிலர் தீயவராவர். அதை உணர்ந்து சிவனைத் தொழுதால் சிவன் அவரை விரும்புவான். மாணிக்கவாசக சுவாமிகளைப்பற்றி விரிவாகத் தெரிந்து கொள். அது உனக்கு உதவும்" என்று சொன்னேன். அவன் வேடிக்கையாகக் கேட்கிறானோ, இல்லை நடிக்கிறானோ, இல்லை உண்மையை அறியக் கேட்கிறானோ என்று சிவனுக்குத்தான் தெரியும்" என்றேன்.

**பூணொணாததொரன்பு பூண்டு பொருந்திநாள்தொறும்**

**போற்றரும் நாணொணாததொர்நாணம் எய்தி நடுக்கடலுள்**

**அழுந்திநான் பேணொணாதபெருந்துறைப்பெருந்**

**தோணிபற்றியுகைத்தலுங் காணொணாத்திருக்கோலம்**

**நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே. 04**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அன்று திருவாசகம் பற்றி உரை நிகழ்த்தினார்; "சிவனடியார்களே, மாணிக்கவாசக சுவாமிகள் எப்போதும் தான் வணங்காதவன், வணங்கத் தகுதியில்லாதவன், பாவங்கள் செய்பவன், பற்றுள்ளவன், எனினும் என்னை நீ ஆட்கொண்டாய்" என்றே கூறுகிறார். இது மனிதர்களின் பெரும்பான்மையோரின் நிலை. "சிவனே, உனது அன்பர்கள் உன்மீது பேரன்பு பூண்டு இடையறாது வணங்குகின்றனர். நான் உன்னை வணங்குவதில்லை. உலக இன்பங்களில் அழுந்திக் கிடந்தேன். ஏறத்தகுதியற்ற என்னை நீ திருப்பெருந்துறைக்குத் தெப்பத்தில் ஏற்றினாய். உன் காட்சியைக் காணத் தகுதியற்ற எனக்கு நீ கழுக்குன்றிலே காட்சியளித்தாய். நீ மேலானவன். நான் கீழானவன்" என்கிறார். இது பக்தியின் உச்சநிலை. ஒரு அபிஷேகத்தைச் செய்துவிட்டு இப்படி யாரும் செய்தார்களா என்று கேட்போரிடையே மாணிக்கவாசக சுவாமிகள் மாறுபட்டவராகக் காணப்படுகிறார். வேலைகள் யாவற்றையும் விட்டு விட்டுச் சிவனையே வணங்குவதாகக் காட்டிக்கொள்ளத் தேவையில்லை. இதற்கென்று நேரமும் ஒதுக்கத் தேவையில்லை. ஓரிரு நிமிடமென்றாலும் பற்றற்று வணங்கி ஒழுக்கமாக வாழ்ந்தால் சிவனின் அருள் கிடைக்கும். அந்த அருள் கிடைத்து விட்டது எனப் பலருக்கும் சொல்லி மகிழாமல் அமைதியாக வாழ் என்பதே மாணிக்கவாசக சுவாமிகளின் எண்ணமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**கோலமேனிவராக மேகுணமாம் பெருந்துறைக்கொண்டலே**

**சீலமேதும் அறிந்திலாத என் சிந்தை வைத்த சிகாமணி**

**ஞாலமேகரியாக நானுனை நச்சி நச்சிட வந்திடுங்**

**காலமேஉனை ஓதநீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே. 05**

"சிவனடியார்களே, சிவனது அருள்நிலை சாதாரணமானது. நாம் அவனை மெய்யன்போடு நினைத்து வணங்கினால் போதும் என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார், "சிவனே, நீ பொன்போல் ஒளிரும் மேனியை உடையவன். அருளுவதில் மேகத்தை மிஞ்சியவன். என் உள்ளத்தில் ஒளிர்கின்ற மணி நீ. உலகம் அறிய நான் உன்னை விரும்பினேன். உரிய நேரத்தில் நீ என்னை வந்து ஆட்கொண்டாய். உன்னைப் புகழ்ந்து பாட நீ கழுக்குன்றில் எனக்குக் காட்சியளித்தாய்" என்று தான் வணங்கிய முறையையும், அதனால் மகிழ்ந்து தன்னை ஆட்கொண்ட முறையையும் மாணிக்கவாசக சுவாமிகள் பகிரங்கமாக எமக்குக் கூறுகிறார். அதன் நோக்கம் எம்மையும் தன்போல் வணங்கினால் சிவன் காட்சி தருவான்" என்று கூறுகிறார். அதனால் ஆடம்பரமான விழாக்கள் மூலம் சிவனைத் திருப்திப்படுத்தலாமென்று எண்ணாது எளிமையாக வணங்குங்கள் பலன் கிடைக்கும். சிவநாதன் என்றொரு மிகவும் ஏழைப்பக்தன் சிவனின் மீது பெரும் பக்தி கொண்டவன். இங்குள்ள வசதியானவர்கள் இலட்சக்கணக்கில் பணத்தைச் செலவுசெய்து திருவிழாக்களும், அபிஷேகங்களும் செய்கின்றனர். அப்படிச் செய்ய என்னால் முடியவில்லை என்று கவலைப்படுவான். பணம் இல்லாது இலட்சக்கணக்கான ஏழைகள் கவலை கொள்கின்றனர். இதைப் போக்கத்தான் மாணிக்கவாசக சுவாமிகள் தான் சிவனை எவ்வாறு வணங்கினேன் என்று கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**பேதம் இலாததொர் கற்பளித்த பெருந்துறைப் பெருவெள்ளமே**

**ஏதமேபல பேசநீஎனை ஏதிலார் முனம் என்செய்தாய்**

**சாதல் சாதல்பொல் லாமையற்ற தனிச்சரண் சரணாமெனக்**

**காதலால் உனைஓதநீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே. 06**

"சிவனடியார்களே, இறைவனுடைய படைப்பில் பலர் குறை காண்கின்றனர். அதைவிட இறைவனில் பலர் குறைகாண்கின்றனர். இறைவனது படைப்பு வினையைப் பொறுத்தது. ஒருவர் முன்பிறப்பில் செய்த பாவபுண்ணியங்களுக்கேற்பவே கர்ப்பப்பை ஓர் உயிருக்குக் கிடைக்கும். பாவம் செய்தவன். பாவப்பட்ட தாயிடத்தும், புண்ணியம்

செய்தவன். புண்ணியம் செய்ததாயின் கர்ப்பத்திலும் பிறப்பான். இது மாற்றமுடியாத உண்மை. பிறந்தபின்பு ஒழுக்கமாக வாழ்ந்து, பற்றற்று இறைவனை வணங்கி, தானதர்மம் செய்வதன்மூலம் துன்பங்களைக் குறைக்கலாம். நல்ல பிறவி எடுக்கலாம். பிறப்பை அழிக்கலாம். மனிதப்பிறப்பு இதற்காகத்தான் இறைவனால் கொடுக்கப்பட்டது. பலர் தாம் இறைவனை வணங்குவதாகவும், தொண்டுகள் செய்வதாகவும் ஆனால் தமது வாழ்வு சிறக்கவில்லை என்கின்றனர். அநியாயங்களைச் செய்வோர்தான் வசதியாக வாழ்கின்றனர் என்றும் இறைவனைக் குறை சொல்கின்றனர். இது மேலோட்டமான சிந்தனையால் வரும் மூட அறிவு. ஒருவருக்கு உள்ள துன்பம் மற்றவருக்குத் தெரியாது. பலர் அதைக் காட்டிக் கொள்வதும் இல்லை. இராமலிங்கம் என்ற பணக்காரனின் கதை உங்களுக்குத் தெரியும். அவரிடம் பல வர்த்தக நிறுவனங்கள் இருந்தன. வாகனங்கள் இருந்தன. பலவீடுகள் இருந்தன. திடீரென்று அவர் மாரடைப்பால் மரணமானார்.அப்போது நூற்றுக்கணக்கான கடன்காரர்கள் பத்திரங்களோடு வந்தனர். அவரது சொத்து முழுவதையும் விற்றும் கடன் தீரவில்லை. இவ்வாறு தான் பலர் வாழ்கின்றனர். அதனால் ஆராயாது பேசாதீர்கள். இறைவனைக் குறைகூறாதீர்கள். அது கீழ்நிலையை அடைய வைக்கும். அவனை மெய்யன்போடு வணங்கிப் பிறப்பை அறுப்பது மேலானநிலை. இது ஞானத்தால் புரிந்து கொள்ள வேண்டிய விடயம். இந்த ஞானத்தைச் சிவன் தனக்குத் திருக்கழுக்குன்றிலே தந்தருளினான் என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அவர் வணங்கும் முறை, அதனாலுண்டாகும் பயன். முத்தி என்பனபற்றி மிகவும் விரிவாகக் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**இயக்கி மாரறு பத்து நால்வரை எண்குணம்செய்த ஈசனே**

**மயக்க மாயதொர் மும்மலப்பழ வல்வினைக்குள் அழுந்தவும்**

**துயக்கறுத்தெனை ஆண்டுகொண்டு நின் தூயமலர்க்கழல்**

**தந்தெனக் கயக்க வைத்தடி யார்முனேவந்து காட்டினாய்**

**கழுக்குன்றிலே. 07**

சுவாமியார் தொடர்ந்து உரையாற்றினார். “சிவனடியார்களே, கலைகள் அறுபத்து நான்கு. அவ் அறுபத்து நான்கையும் பெண்களாகச் சைவசமயம் உருவகித்துள்ளது. கலைகளை உலக இன்பத்துக்காகப் பயன்படுத்துவது கேலமானது. பிறப்புகளுக்கு வழிவகுப்பது. அவற்றைப் புனிதமாகக் கருதுதல் வேண்டும். புனிதமாக அவற்றைக் கருதிப் பயன்படுத்துபவர்கள் சிவபெருமான் எண்குணத்தவர் என்ற அனுபவத்தைப் பெறுவர். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும்

அக்ஞானத்தின் வடிவங்கள். அவற்றோடு சீவாத்மா சேர்வதால் துன்பம்தான் உண்டாகும். அத்துன்பத்தை இறைவனது அருளால் அகற்றலாம். அது அகன்றால் இறைவனது அருள் கிடைக்கும். அதனால் உடல்மெலிவு ஏற்பட்டுத் தெய்வீகக்களை உண்டாகும். அந்த மேலான நிலையில் சீவாத்மா பரமாத்மாவுடன் ஒன்றுபடுகிறது. அத்தகைய அருள்நாட்டத்தை நீ எனக்குக் கழுக்குன்றிலே காட்டினாய்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்"

கலைகள் புனிதமானவை. அதை இயற்றுவோரும், கேட்போரும் புனிதர்களாகின்றனர். பரதநாட்டியம் நடராசரது ஆடற்கலை. அதை அழகான பெண்கள் ஆடுவார்கள். அழகான உடையுடுத்தி, தம்மை அழகாக அலங்கரித்து, இனிமையாகப் பாடி ஆடும்போது ஆடும் அந்த அழகான பெண்களை நடராசப் பெருமானாகக் கருதுதல் வேண்டும். நடராசரது நடனத்தை அப்பெண் ஆடிக்காட்டுகிறாள். அப்போது அவளது அழகிய அங்க அசைவுகளை ரசிப்பதால் பாவம் உண்டாகும். அதைத் தெய்வீகமாக நினைத்தால் இறைவனின் அருள் கிடைக்கும். அழகான பெண்கள் முன்பு கோவில்களில் ஆடினால் அவர்களின் அழகிலும், நடனத்தின் திறமையிலும் மோகங் கொள்வோர் பலர். அப்படியான ஒரு நடனத்தைப் பார்த்த மாணிக்கவாசக சுவாமிகளுக்குச் சிவன்தோன்றி அக்ஞானத்தை அழித்தாக அவரே கூறுகிறார். அதனால் தனக்கு உடல்மெலிவு உண்டானதாகவும் கூறுகிறார். கலைகளைப் பெண்ணாக உருவகித்தமைக்கு முக்கிய காரணம் மும்மலங்களையும் அழித்தற்பொருட்டேயாகும். இந்த உண்மையை உணர்பவர்கள் ஞானிகள்" என்றார்.

திருச்சிற்றம்பலம்